| | | |
|---|---|---|
| O.S No. | : | 99/2019 |
| DATE | : | 07.11.2025 |
| பெயர் | : | சகிலா |
| கணவர் பெயர் | : | அல்லா பாட்ஷா |

**2ம் பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. வா.சா.ஆ–1 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது அதில் வண்ணம் தீட்டப்பட்ட F பகுதி நாராசத்தை சாட்சி ஒப்புக் கொண்டார். வா.சா.ஆ–3 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது சாட்சி தனக்கு தமிழ் படிக்க தெரியாது என்று தெரிவித்தார். ஆகவே பக்கம் 6ல் பொது வழி நாராசம் என்று கண்டுள்ளது பற்றி அவரிடம் படித்து காண்பித்ததற்கு அவர் சரியல்ல என்று கூறினார். எனக்கு தமிழ் படிக்க தெரியாது ஆகவே கிரைய ஆவணத்தில் உள்ள விவரங்கள் என்னிடம் தமிழில் படித்து காண்பிக்கப்பட்டு நான் புரிந்து கொண்டு தமிழில் மட்டும் கையெழுத்து போட்டுள்ளேன் என்ற வாசகம் அந்த ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால் எனது பையன் தான் படித்து வாங்கியிருப்பார். என் பையன் காசு கொடுத்தார், என் பெயரில் சொத்து வாங்கப்பட்டது.

நீதிமன்ற குறிப்பு – சாட்சியிடம் என்ன கேள்வி கேட்டாலும் மறு கேள்வி கேட்டு சரிவர பதில் தெரிவிக்காமல் சாட்சிய பதிவிற்கு இடையூறு விளைவித்தார்.

4. வா.சா.ஆ–4 ஆவணத்தில் பக்கம் 8ல் 4 அடி போகவர பாக்கியம் பற்றி கண்டுள்ளது என்றால் சரிதான். பொது வழி நாராசத்திற்கு உண்டான சர்வே எண் என்ன என்றால் 3144. அந்த சர்வே எண் மொத்த சொத்திற்கும் உள்ளது என்றால் சரிதான். பொது வழி நாராசத்தின் சர்வே எண் உட்பிரிவு எனக்கு தெரியாது. எனக்கு விற்பனை செய்வதற்கு முன்பு பொது சொத்தாக இருந்த காலகட்டத்தில் சொத்தின் கதவு எண் 20, 20A ஆகும்.

5. வா.சா.ஆ–6 ஆவணம் ரகமத்துல்லா அமினா பேகத்திற்கு எழுதிய தானசெட்டில்மெண்ட் பத்திரம். வீட்டின் முன்பு திண்ணை இருந்த விவரத்தை கிரைய ஆவணத்திலோ, தானசெட்டில்மெண்ட் பத்திரத்திலோ

குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதியின் கிரைய பத்திரத்தை வாங்கி நான் வாசித்து பார்க்கவில்லை.

**கற்றறிந்த 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.